# லுணுகல பிரதேச சபை
# பதுளை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2011 ஏப்ரல் 01 ஆந் திகதி தாபிக்கப்பட்டிருந்த சபையின் 2011 ஏப்ரல் 01 ஆந் திகதி தொடக்கம் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குரிய நிதிக் கூற்றுக்கள் 2012 யூன் 25 ஆந் திகதிவரையும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 வருமான நிருவாகம்

#### 2.1.2 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டிற்குரிய மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.1.2 நீதிமன்ற தண்டபணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 835,740 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 137,105 |

### 2.1.3 கடை வாடகை

உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் முதலாவது மற்றும் இரண்டாவது பிரிவுகளின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான 10 கடைகளுக்காக மாதாந்த வாடகை பிரதான மதிப்பீட்டாளரினாலோ அல்லது உள்ளூராட்சி சேவையின் மதிப்பீட்டாளர் ஒருவரினாலோ மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கைக் குடியரசின் தாபன விதிக்கோவையின் VII ஆவது அத்தியாயத்தின் 12:5:2 ஆம் பிரிவின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக சபையின் பதில் செயலாளருக்கு 2011 ஏப்ரல் 01 தொடக்கம் திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்காக பதில் கடமை சம்பளமாக ரூபா 40,335 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.